1980 ஜூலை 29]

வில்லிவாக்கம் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 68—திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை மாநகராட்சி (வில்லிவாக்கம்) 32,33 வட்டங்களில் கழிவு நீரை அகற்ற பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் என்றால், அதற்காக செலவிடப்படும் தொகை எவ்வளவு?

(இ) இத்திட்டம் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில் சென்னை மாநகராட்சி கழிவு நீர் அகற்றும் திட்டத்தை சென்னை மாநகரத்தின் கமிஷனராக மேட்லி என்பவர் இருந்த நேரத்தில் ஏறத்தாழ 10 லட்சம் மக்களுக்குத் தேவையான அடிப்படை நோக்கத்தில் இந்த திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் தற்போது சென்னையில் 30 லட்சம் மக்கள் இருக்கின்ற காரணத்தால் அங்கே கழிவு நீர் அகற்றும் நடவடிக்கைகள் சரியாக இயங்கவில்லை. ஆகவே அதிகமான மக்கள் இருப்பதாலேயும் சென்னை மநகரத்தோடு பல பகுதிகள் புதிதாக இணைக்கப்பட்டிருப்பதாலும் இந்தத் திட்டத்தை மாற்றி அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, கேள்வி ''சென்னை மாநகராட்சி'' (வில்லிவாக்கம்) 32, 33 வட்டங்களில் கழிவு நீரை அகற்றப் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பது.

திரு. சு. பாலன்: இது பொதுவான கேள்வி அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி வில்லிவாக்கத்தைப் பற்றியது.

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, வில்லிவாக்கமும் தற்போது சென்னையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. நான் இதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் உண்டா என்றுதான் கேட்டேன்.

DR. K. SOURIRAJAN: All the extended areas also come under the same category. Is there any programme or policy with the State Government to enlarge the present under ground drainage scheme That is what the question pertains to. There is a lot of areas in the entire South Madras where sewage is over flowing. What is the programme or policy on the part of the Government to see that sewage is properly disposed of. That is what is wanted.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, கேள்வி மிகத் தெளிவாக வில்லிவாக்கம் 32, 33 என்று இருக்கிறது. நீங்கள் கேட்பது சென்னை மாநகரம் பூராவையும் பற்றியதாகும்.

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்டுத்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே வில்லிவாக்கம் உள்ளடங்கிய சென்னை மாநகராட்சியில் இதற்கான மாற்றுத் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் வில்லிவாக்கத்தைப் பற்றிய பதில்தான் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் 32, 33 வட்டங்களைப் பற்றிய அமைச்சரின் பதில் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு பதில் 'இல்லை' என்று சொல்லி விட்டேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சென்னைக்குப் பூராவும் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்வதால் மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லை என்றாலும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கும் சென்னை நகருக்கு வெளியே ஆனால் சென்னை புறநகர் எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கல் கழிவு நீர் அகற்றல் ஆகிய பணிகளுக்காக உலக வங்கியின் உதவியுடன் ஆய்வு செய்யப்பட்டு விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அதன் மீதான திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. அந்த ஆய்வுகள் முடிந்தவுடன் அந்த திட்டத்திற்கான மொத்தச் செலவு எவ்வளவு, அதன் தன்மை என்ன என்பது தெரிய வரும்.

1980 ஜூலை 29]

DR. K. SOURIRAJAN: How long it will take?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்.

DR. K. SOURIRAJAN: 'Araichi' means, it may take even 20 years. There is no use at all. How long it will take? Probable time, we want to know. We have to satisfy the people. We have come here to represent the grievances of the people. They are asking us 'what is to be done?'.

MR. SPEAKER: Probable time சொல்ல முடியாது. உலக வங்கித் திட்டம் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருவதாகச் சொல்லி இருக்கிறார். அது எப்போது முடியும் என்று எப்படி இப்போதே சொல்ல முடியும்?

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, வில்லிவாக்கத்தில் பாதாளச் சாக்கடை திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். பொதுவாக வில்லிவாக்கம் மழையால் பெரிய அளவில் சுகாதார வசதியில் சீர்கேடு அடைந்து ரோடுகளில் கொசு உற்பத்தியாகி சென்னை மாநகரத்திற்கே கொசு சப்ளை ஆகும் ஒரு நிலைமை அங்கே இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு இரவு தங்கினால் அந்தக் கொடுமையை உணர முடியும். ஆகவே சென்னை மாநகரம் பூராவிற்கும் ஒரு திட்டம் ஆராய்ச்சியில் இருப்பதாகச் சொல்கிறார்களே, அந்த ஆராய்ச்சி முடிந்த பின்னர் அந்தத் திட்டத்தை நிறைவேற்றும்போது வில்லிவாக்கத்திற்கு முதலிடம் தந்து ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இது சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கும் சென்னை நகருக்கு வெளியே சென்னை புறநகர் எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கும் போடப்பட்டுள்ள மாபெரும் திட்டம். இதில் எது முன்பு எது பின்பு என்று சொல்வதற்கு இயலாது.

மடிச்சல் கால்வாய்த் திட்டம்.

*வினா எண் 69—திரு. டி. மணி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விளவங்கோடு தாலூகாவில் மடிச்சல் கால்வாய் வெட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?